Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# Women's Standard of Living in the Sangam Era

**Dr. K. Kavitha,** Assistant Professor of Tamil, Sri Ayyappa Women's College, Chunkankadai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0007-1851-3612
DOI: 10.5281/zenodo.14744596

## Abstract

*Sangam literature is the cultural symbol of Tamil life. They reflect the times and depict the inner life of man. Sangam literature songs are not only creative rather than they know, experience simple naturalness etc. Women have been seen as the highest creation among worldly creations in Tamil Society. It is a woman who creates and preserves all life, and shares love and support. The great Tamil poet Sekilar praised his wife as the 'foundation of the family'. Valluvar praised the woman 'Pennith Perundaka Yavula' in his kural. The Sangam way of life was based on the natural ecosystem. People's food, occupation, customs, entertainment, attitude and religious beliefs depend on the circumstances in which they live. The social life during the Sangam period was divided into internal (Agam) and external (Puram). Inner life explains the mental processes, customs and social structure of the society of that time. During the Sangam period, women are also advanced in education. Avvaiyar, Kakaipadiniyar, Nakkannaiyar, Velliveediyar, Nappasalaiyar, Vennikkuyatiyar, Madurai Olaikkadayatar Nalvellayayar, Adhimanti etc. have been poets and literary contributors. From the songs of women poets, one can know that women excelled in all spheres of life. Apart from that, women of the Sangam period have excelled in love, knowledge, bravery, patriotism, hospitality and motherhood.*

**Keywords**: Women, Life, Sangam Times, Culture.

## References

[1] Anusuya, Ir. "Pengalum Alumai Thiranum." *International Journal of Tamil Language and Literature*, Vol.2, Special Issue.3, Feb.2020.
[2] Indupala, Ir. "Tamil Ilakkiyankalil Penniya Kattamaippum Kattudaippum." *International Journal of Tamil Language and Literature*, July 2020.
[3] Udayakumari, D.R. "Sanga Padalkalil Panpattu Kurugal." *Puthiya Avaiyam*, Special Issue: Vol.07, Issue.03, December 2023.
[4] Saminatha Iyer, U.V., (Ed.). *Ingurunooru (Pazhayavurai),* Vaijeyanthi Achukudam Chennai, 1903.
[5] Somasundaran, P.V., (Ed.). *Agananooru*, Saiva Siddhanta Theological Seminary Publication, Chennai, 1966.
[6] Duraisamy Pillai, S. A. *Natrinai (Explanation).* Arunabh Publications, Chennai, 1968.
[7] Duraisami Pillai, K., *Purananooru Uraiyudan*. Kazkha Veliyeedu. Tirunelveli, 2007.
[8] Nachinarkiniyar, *Patuppattu Moolamum Uraiyum*, Kesari Printing House, Chennai, 1931.
[9] Nasima, A. "Intaiya Kala Soolalil Manpurm Panpattin Maperum Thurthuvarkal Magalir." *Vetrimunai International Journal of Life Development*, World Tamil Development Conference 2024, Malar 15, Issue. 08, August 2024.
[10] Nagarasan, V., (Ed.), *Kuruntogai Moolamum Uraiyum*. New Century Book House, Ambattur. Chennai - 600 098.

[11] Porselvi, P. "Sanga Ilakkiyankalil Vazhviyal Nerigal.' *International Journal of Tamil Language and Literature,* Vol.2, Special Issue 3, Feb.2020.

[12] Jayanthimala, C.V. "Poorananooru Kattum Manitha Urimai Sinthanaigal." *Vettimunai International Journal of Life Development,* World Tamil Development Conference 2024, Malar 15, Issue. 08, August 2024.

[13] Jaysree, N. "Ingurunootil Panpattu Pathivugal." *Vettimunai International Journal of Life Development,* World Tamil Development Conference 2024, Malar 15, Issue. 08, August 2024.

**Author Contribution Statement:** NIL

**Author Acknowledgement:** Nil

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# சங்ககால இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல்

**முனைவர் கு. கவிதா**, உதவிப்பேராசிரியர், ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி, சுங்கான்கடை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0007-1851-3612
**DOI: 10.5281/zenodo.14744596**

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழர் வாழ்வின் பண்பாட்டு சின்னமாகத் திகழ்பவை சங்க இலக்கியங்களேயாகும். அவை காலத்தைப் பிரதிபலித்துக் காட்டுவதோடு மனிதனின் அகப்புற வாழ்வை சித்தரித்தும் காட்டுகின்றன. சங்க இலக்கியப் பாடல்கள் வெறும் படைப்பு திறனை மட்டும் கொண்டிருக்கவில்லை. மாறாக அறிவு, அனுபவம் நுட்பம், எளிமையான இயல்பான தன்மை போன்றவற்றையும் கொண்டுள்ளன. சங்ககாலத்தில் பெண்கள் கல்வியிலும் மேம்பட்டிருந்தனர். அவ்வையார், காக்கைப்பாடினியார், நக்கண்ணையார், வெள்ளிவீதியார், நப்பசலையார், வெண்ணிக்குயத்தியார், மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார், ஆதிமந்தி முதலானோர் புலவர்களாக இருந்து இலக்கியத் தொண்டாற்றி உள்ளனர். பெண் புலவர்களின் பாடல்களில் இருந்து பெண்கள் கல்வியிலும் சிறந்து விளங்கினர் என்பதை தெரிந்து கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல் அன்பிலும், அறிவிலும், வீரத்திலும், நாட்டுப்பற்றிலும் விருந்தோம்பலிலும், தாய்மைப்பண்பிலும், சங்ககாலப் பெண்கள் சிறந்து விளங்கியுள்ளனர். சங்ககால இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** பெண்கள், வாழ்க்கை, சங்க காலம், பண்பாடு.

## முன்னுரை

உலகப் படைப்புக்களில் உயர்ந்த படைப்பு பெண்ணே. அனைத்து உயிர்களையும் உண்டாக்குவதும், காப்பாற்றுவதும் பெண்ணே. அன்பு, ஆதரவு பகிர்தல் இது மூன்றுக்கும் பொருத்தமாக மனித குலத்தில் வாழ்பவள் பெண். சேக்கிழார் மனைவியை 'மனையறத்தின் வேர்' என்று புகழ்ந்துள்ளார். அதனால் தான் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று வள்ளுவரும் கூறியுள்ளார். சங்ககால வாழ்க்கை முறை இயற்கை அமைப்பை அடிப்படையாகக் கொண்டது. மக்களின் உணவு, தொழில், பழக்க வழக்கங்கள், பொழுதுபோக்கு, மனப்பாங்கு, சமய நம்பிக்கை ஆகிய அனைத்தும் அவர்கள் வாழும் சூழ்நிலைக்கேற்ப அமைந்தது. சங்ககால சமுதாய வாழ்வு அகம், புறம் என இரண்டாகப் பகுக்கப்பட்டிருந்தது. அகவாழ்க்கை அக்கால சமுதாயத்தின் மன ஓட்டங்களையும், பழக்கவழக்கங்களையும், சமுதாய கட்டமைப்பையும் விளக்கியது. புறவாழ்க்கை அரசியல் நடவடிக்கைகளையும், பொருளாதார நிலைகளையும் விளக்கியது. இலக்கியத்தை காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பார்கள் அறிஞர்கள்.

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

ஏனெனில் இலக்கியங்களில், அந்தந்த காலச் சூழ்நிலைக்கு ஏற்ப மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு, விழாக்கள், கலாச்சாரம், ஆட்சிமுறை, ஆடைகள், அணிகலன்கள் போன்றவைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தது மட்டுமில்லாமல் நாகரிகமாகவும் வாழ்ந்துள்ளனர். தமிழகத்தில் பழங்காலத்தே மக்கள் நிலங்களை ஐவகையாகப் பகுத்து அந்தந்த நிலங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை பண்பாட்டு நெறியோடு தங்களுக்கே உரிய ஒழுக்க நெறிகளை பின்பற்றி வாழ்ந்தனர் என்பதை வரலாற்று சான்றுகள் மூலம் தெரியலாம். பழந்தமிழர் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தனர். இயற்கையை அழித்தால் அல்லது எதிர்த்தால் அதன் விளைவு விபரீதம் எனவும் தெரிந்திருந்தனர். வாழும் சூழலுக்கு ஏற்ற வகையிலான உணவுப் பழக்கங்களையும் கொண்டிருந்தனர். சூழலுக்கு மாறுபட்ட உணவு வகைகளை உண்ணும் போது தீய விளைவுகள் ஏற்படும் என்பதையும் 'உணவிற்கேற்ப உடல்நலம்' என்பதையும் தெரிந்திருந்தனர்.

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என சித்தரிக்கப்படும் சங்ககாலத்தில், ஆண் புலவர்களுக்கு நிகராக பெண் புலவர்கள் இலக்கியத்தில் திறன் மிக்கவர்களாக இருந்துள்ளனர். பெண்களைக் குறிப்பிடும் வகையில் சங்ககாலப் புலவர்கள் பயன்படுத்திய சொற்கள் வியப்பைத் தருகின்றன. மாதர், பெண், நல்லார், ஆயிலை, அணியிழை, மென்சாயலர், பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை போன்ற பெயர்கள் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில், பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவர்கள் எழுதிய பாடல்கள் அடங்கிய அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, நற்றிணை, பொருநராற்றுப்படை போன்ற இலக்கியங்களின் வழி பெண் புலவர்கள் இருந்ததை அறியமுடிகிறது. சங்ககாலக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி போன்றவற்றில் உள்ள பெண் பாத்திரங்களில் சிறப்பு மிக்க பெண்கள் பற்றி கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் கண்ணகி, மாதவி, கவுந்தியடிகள், தேவந்தி போன்றவர்களின் வரலாறுகள் பல பெண்களின் மாண்புகளை உயர்த்துவதாக அமைந்திருக்கின்றன.

மனைவிளக்கென மாண்புடன் திகழும் சங்ககால இலக்கியங்களில் மங்கா இடத்தை பெண்கள் பெற்றுள்ளனர். தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒரு அங்கமாக பெண்களின் பண்புகள் குறிப்பிடத்தக்கன. 'தீவினைக்கும் துன்பத்திற்கும் பெண்கள்' என்ற சொல்லுக்கு இடமின்றிச் சங்ககால பெண்கள் திகழ்ந்துள்ளனர். சமூகத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்ற பெண்கள் இல்லறத்திலும், சமூகத்திலும், சிறப்பான பங்கை பெற்றிருந்தனர். விழாக்கள், சடங்குகள், கல்வி, வீரம், சமயநிலை, அன்பு, ஒழுக்கமுடைமை போன்றவற்றிலும் சிறந்த அரசியல் ஆலோசகர்களாகவும், மதிநுட்பம் உடையவர்களாகவும் பெண்கள் விளங்கினர். மேற்கூறிய பண்புகளை மையமாகக் கொண்டு சங்ககால இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வு அணுகுமுறை**

சங்க கால இலக்கியங்களில் பெணக்ளின் வாழ்வியல் என்னும் இவ்வாய்வு சங்க இலக்கியத்தில் விளக்கமுறை அணுகுமுறை, சமுதாயவியல் அணுகுமுறை மற்றும் பகுப்பாய்வு அணுகுமுறைகளை உள்ளடக்கி அமைந்துள்ளது.

**பெண்களின் வாழ்வியல்**

அகவாழ்க்கையிலும், புறவாழ்க்கையிலும் பெண்களின் நிலை போற்றத்தக்கதாக விளங்கியது. சங்ககால மகளிர் தங்கள் வாழ்க்கைக்கு தேவையான உணவுப் பொருட்களை வீட்டிலேயே தயாரிப்பதும், அதனை பண்டமாற்று முறையில் கொடுத்து அதற்கு ஈடாக வேறு பொருட்களை வாங்கி சொந்தமாகத் தொழில் செய்து வருவாய் ஈட்டி ஒழுக்கமுடன் வாழ்ந்தனர்.

**உறையமை தீந்தயிர் கலக்கி நுரை தெரிந்து…**

**…அளைவிலை உணவில் கிளையுடன் அருத்தி (பெரும்., 158-163)**

என்ற பாடலில் முல்லை நிலப்பகுதியில் வாழ்ந்த ஆயர் மகளிர் தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுத்து நெய் காய்ச்சினார்கள். தயிரையும், மோரையும் கொடுத்து தானியத்தைப் பெற்று உணவு சமைத்து உண்டுள்ளனர் என்பதை அறியலாம்.

நெய்தல் நிலத்தில் வாழ்ந்த உமணப்பெண் சேரியில் உப்பு விற்றதையும், உப்பின் அளவுக்கு ஏற்ப நெல் தர வேண்டும் என்று அவள் கூறியதை,

**கதழ் கோல் உமணர் காதல் மடமகள்**

**சில் கோல் எல் வளை தெளிர்ப்ப வீசி,**

**'நெல்லின் நேரே வெண் கல் உப்பு' எனச்**

**சேரி விலைமாறு கூறலின் (அகம்.,140: 5-8)**

என்ற பாடல் தெரிவிக்கிறது.

**பசுமீன் நொடுத்த வெண்ணெல் மாத தயிர் மிதி**

**மிதவை ஆர்த்துவம் நினக்கே (அகம்., 340: 14-15)**

என்ற பாடலில் நெய்தல் நில மகளிர் மீனை விற்று அதற்கு பதிலாக வாங்கிய நெல், தயிர் எங்களிடம் இருக்கிறது உங்களுக்கு தயிர் சோறு உண்ணத்தருவோம் என தலைவனிடம் தோழி கூறுகின்றாள். புறநானூற்றில் இடைச்சியரும் உழவனுக்கு தயிரைக் கொடுத்து நெல்லைப் பெற்றுக் கொண்டனர்.

ஐங்குறுநூற்றில் பாணர் உள்நாட்டு நீர்நிலைகளில் (ஆறு, ஏரி, குளங்களில்) வலை வீசியும், தூண்டில் போட்டும் பிடித்த மீன்களைப் பாண் மகளிர் ஊரில் கொண்டு போய்ப் பயிற்றுக்கும், தானியத்திற்கும் விற்றனர் என்பதை,

**முள் எயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த**

**அகன்பெரு வட்டி நிறைய மனையோள்**

**அரிகால் பெரும்பயறு நிறைக்கும் (ஐங்.மருதம், புலவிப்பத்து. 47)**

என்ற பாடல் தெரிவிக்கின்றது. நெய்தல் நிலத்து முதுமகள் ஒருத்தி தன் உப்பளத்தில் விளைந்த உப்பை மாற்றி நெல்லை பெற்றுக் கொண்டதை,

**நீனிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்**

**உப்பை மாறி வெண்ணெல் தரீஇய**

**உப்புவிளை கழனிச் சென்றனள் (குறுந்., 269: 4-6)**

என்ற பாடல் மூலம் அறியலாம். இதன் மூலம் பெண்கள் ஆண்களுக்கு சமமான வாழ்வியல் முறையை மேற்கொண்டனர் என்பதை உணரலாம்.

**இன்றைய கால சூழலில், தமிழ் இலக்கியங்களில் காணப்படும் தமிழரின் மரபுகளையும், பண்பாடுகளையும் இன்றளவும் கடத்தி வருபவர்கள் மகளிர் என்றால் அது நிதர்சனமான உண்மை. (முனைவர் அ.நசீமா, ப. 252)**

**தினைப்புனம் காவல்**

சங்ககாலத்தில் தினைபுனத்தைக் காவல் செய்யும் பொருட்டு பெண்கள் அனுப்பப்பட்டனர் என்பதை,

**தழலை வாங்கியும் தட்டை ஓப்பியும்**

**அழல் ஏர் செயலை அம் தழை அசைஇயும்**

**குறமகள் காக்கும் ஏனல்" (அகம்., 118: 11-13)**

**படுகிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே (குறுந்., 291: 2)**

**உண்கிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே (குறுந்., 360: 6)**

சங்ககாலத்தில் பருவம் எய்திய பெண்கள் தினைப்புனம் காவலின் பொருட்டு வெளியே வருவர். தினைப்புனக் காவல் அவர்களது வாழ்வின் தொடக்கமாக அமைவதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

**அன்றைய பழந்தமிழர்கள் எந்தவித நவீனத் தொழில்நுட்பமோ உபகரணங்களோ இல்லாத காலகட்டத்தில், வீட்டிலிருந்த மகளிர் வீட்டில் கிடைத்த பருத்தியைக் கொண்டு கிடைக்கப் பெற்ற உபகரணங்களுடன் தனது உத்தியைப் பயன்படுத்தி ஆடைகள் நெய்ய ஆரம்பித்தனர். எதனோடு எதனைக் கலந்தால் நிறம் உருமாறும் என்பதனை நன்கறிந்த மகளிர் வண்ணம் பூசிய ஆடைகளையும் உருவாக்கினர். அவர்களை 'பருத்திப் பெண்டிர்- Cotton Women' என்று அழைத்தனர். (முனைவர் அ. நசிமா, ப. 255)**

**சேமிக்கும் பழக்கம்**

சங்ககாலப் பெண்களிடம் சேமிக்கும் பழக்கம் இருந்தது என்பதை பின்வரும் பாடலால் அறியலாம்.

**நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்**

**எருமை நல்லான் கருநாகு பெறுஉம்**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**மடிவாய்க் கோவலர் (பெரும்பாண். 164 - 166)**

என்ற பாடலில் இடைச்சியர் நெய்யைப் பண்டமாற்று செய்யாமல் காசுக்கு விற்று அக்காசுகளைச் சேமித்து வைத்தனர். குறிப்பிட்ட தொகை சேர்ந்தவுடன் அக்காசைக் கொடுத்து பசுவையும், எருமையையும் விலைக்கு வாங்கிக் கொண்டனர். அதன் மூலம் மேலும் மேலும் அவர்கள் வருவாய் ஈட்டினர்.

**வயலில் களை எடுத்தல்**

புறநானூற்றில் உழத்தியர் வயலில் களை பறிக்கும் போது நெய்தல் பூவையும், ஆம்பல் பூவையும் களைந்து எறிவாள். அந்த வயலில் மேயும் மலங்கு மீனையும், வாளை மீனையும் பிடித்துத் துண்டு துண்டுகளாக நறுக்கிச் சமைத்து புதுநெல் அரிசிப் பொங்கலோடு சேர்த்து உண்ட வயல் தொழிலாளர்கள் நெல்லுக்கட்டுகளைத் தூக்கிக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடப்பர் என்பதை,

**கொண்டைக் கூழைத் தண் தழைக் கடைசியர்…**

**…புது நெல் வெண் சோற்றுக் கண்ணுறை ஆக (புறம்., 61: 1-5)**

என்ற பாடல் மூலம் பெண்களின் வாழ்வியலைத் தெரிந்து கொள்ளலாம்.

**பூ விற்றல்**

ஆண்கள் போருக்கு சென்றால் சங்ககால மறக்குல பெண்கள் அவர்களை பிரிந்திருக்கும் நாட்களில் பூச்சூடாமல் இருந்தனர். அதனால் பூ விற்கும் பெண் தோற்றப் பொலிவிழந்து காணப்படுவாள். அவள் பூவை விற்பதற்கு, போருக்குப் போகாதவர்கள் இருக்கும் வீடுகளுக்கு போவாள் என்பதனை,

**நாண்உடை மாக்கட்கு இரங்கும் ஆயின்**
**எம்மினும் பேர்எழில் இழந்து வினைஎனப்**
**பிறர்மனை புகுவள் கொல்லோ?**
**அளியள் தானே பூவிலைப் பெண்டே! (புறம்., 293: 3-6)**

என்ற பாடலின் மூலம் சங்க கலத்தில் பெண்கள் பூ விற்றதை அறியலாம்.

**கள் விற்றல்**

அரியல் என்பது பனைமரத்தில் விளைந்து அரித்தெடுக்கும் கள் அந்த அரியலை விற்கும் பெண் தான் அமர்ந்திருக்கும் பக்கத்தில் பருகும் பனங்குடை வைத்திருப்பாள். அந்தப் பனங்குடையில் ஊற்றிக் கள்ளை ஆடவர்க்கு கொடுப்பாள். அரி நிறத்தில் இருக்கும் அந்தக் கள்ளை வாங்கி, வேண்டிய அளவு பருகிவிட்டு ஆடவர்கள் போருக்குச் செல்வர் என்பதனை,

**அரியற் பெண்டிர் அல்கிற் கொண்ட**
**பகுவாய்ப் பானைக் குவிமுனை சுரந்த**
**அரிநிறக் கலுழி ஆர மாந்திச்**
**செருவேட்டு, சிலைக்கும் செங்கண் ஆடவர் (புறம்., 157: 1-4)**

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

என்ற பாடல் மூலமும்,

**பாசிழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய**
**நார் அரி தேறல் மாந்தி (புறம்., 367: 6-7)**
**இன்கடுங் கள்ளின் அகுதை தந்தை (குறுந்., 298: 5)**

ஆகிய பாடல்கள் மூலமும் பெண்கள் கள் விற்ற செய்தியைத் தெரிந்து கொள்ளலாம்.

> **இன்றைய காலகட்டத்தில் பெண்கள் குடும்ப வருவாயைப் பெருக்கும் வகையில் வெளிநாடு சென்று கூட வேலை பார்க்கின்றனர். கல்வியும், பொருளாதார சுதந்திரமும் பெண்களுக்குத் தன்னம்பிக்கையை அளித்துள்ளது. பெண்கள் பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டு பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலியுள்ளனர். (முனைவர் இரா. அனுசுயா, ப. 36)**

**அன்பின் வெளிப்பாடு**

சங்ககால பெண்கள் அன்பு மிகுந்தவர்களாகவும், தலைவனுக்கு ஏற்றத் துணைவியாகவும் வாழ்ந்து வந்தனர். இனிமையான இல்லறத்திற்கு அன்பு தேவை என்பதை உணர்ந்தவளாக பெண்கள் சித்தரிக்கப்படுகின்றனர். தலைவன் தலைவி ஆகிய இருவரின் அன்பை வெளிப்படுத்தும் பாடல்கள் சங்க இலக்கியத்தில் எழுதப்பட்டிருந்தாலும், தலைவியின் அன்பின் வெளிப்பாடே பெரும்பாலான பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

**நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;**
**நீரினும் ஆர் அளவின்றே சாரல்**
**கருங் கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறுந்., 3: 1-4)**

நீரின்றி எப்படி உயிர்வாழ முடியாதோ அதைப்போன்று அன்பின்றி வாழும் இல்லற வாழ்க்கை சிறக்காது என்ற கருத்தை தலைவியின் பாத்திரப்படைப்பால் சங்க இலக்கியம் வெளிப்படுத்துகின்றது.

**சாதல் அஞ்சேன்; அஞ்சுவல் சாவின்**
**பிறப்புப்பிறி தாகுவது ஆயின்**
**மறக்குவேன்கொல் என் காதலன் எனவே (நற்., 397: 7-9)**

என்ற பாடலில் தலைவி தலைவன் மேல் கொண்ட அன்பினை வெளிப்படுத்துகிறாள்.

**இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயா கியர் என் கணவனை**
**யானாகியர் நின் நெஞ்சு நேர் பவனே (குறுந்., 49: 3-5)**

இப்பிறப்பில் மட்டுமல்லாமல் மறுபிறப்பிலும் நீயே என் கணவனாக வர வேண்டும் என பெண் விரும்புகின்றாள்.

**காலம் காலமாக பெண்கள் என்பவர்கள் ஒரே மாதிரியாக சித்தரிக்கப்பட்டு வந்துள்ளனர். அதாவது தாய் என்றால் தியாகம், பாசம், தன்னலமின்மை போன்ற குணங்கள்; மனைவி எனில் பணிவு, அடக்கம், பாசம் என்னும் குணங்கள் இருக்கும் (முனைவர் இரா. இந்துபாலா, ப. 54).**

கணவனின் உடல், மனம் இரண்டையும் பேணுவதில் மனைவி ஆர்வமும், ஈடுபாடும் காட்டியதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கணவனுக்கு இனிய உணவு சமைத்து அவன் உண்ணும் காட்சியை மனைவி கண்டு களித்ததை,

**இனிதெனக் கணவன் உண்டலின்**

**நுண்ணிதில் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்., 167: 5-6)**

என குறுந்தொகை குறிப்பிடுகிறது.

கணவன் வறுமையுற்ற போது தந்தை கொடுத்து அனுப்பிய உணவைப் பெறாது கணவன் வீட்டிலேயே ஒரு வேளை பட்டினி கிடந்து மறுவேளை உண்டு மகிழ்ச்சியாக இருக்கிறாள் பெண் என்பதை,

**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென**

**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளான் (நற்., 110: 11 - 12)**

என்ற பாடல் தெரிவிக்கின்றது.

திருமணமாகி கணவன் வீட்டிற்கு சென்ற பெண் ஒருத்தி சில காலம் கழித்து தனது தாய் வீட்டிற்கு வருகிறாள். தோழிகள் இல்லற வாழ்வினைப் பற்றி வினவ,

**தேன் மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**

**மானுண்டு எஞ்சிய கழிலி நீரே (ஐங்., 203: 2-4)**

என்று கூறுகிறாள். இதன் மூலம் தலைவன் மீது தலைவி கொண்டிருந்த அன்பின் ஆழம் புலனாகிறது. இதனால் புகுந்த வீட்டின் தன்மைக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் பண்பினையும் சங்ககால பெண்கள் பெற்றிருந்தனர் என்பதை உணரலாம்.

**தாய்மை உள்ளப் பண்பு**

சங்க கால பெண் கணவனுக்கு ஏற்ற பண்புகளைக் கொண்ட மனைவியாகவும், சமூகத்திற்கு பயனுள்ள பிள்ளைகளை பெற்று வளர்ப்பவளாகவும், பிறந்த இடத்தின் பெருமையை பேணி காப்பவளாகவும் இருந்துள்ளாள். திருமணத்திற்கு பின் பெண் தியாக வாழ்க்கையை மேற்கொள்கிறாள். புகுந்த வீட்டின் தன்மைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டு குடும்பத்தின் இன்பம் தனது கையிலே என்பதை உணர்ந்து பக்குவம் மிக்கவளாகவும் காணப்படுகிறாள்.

இல்லற வாழ்வின் தலையாய குறிக்கோளாக குழந்தைப்பேறு கருதப்பட்டது. இம்மைப்புகழும், மறுமை இன்பமும் குழந்தையால் கிட்டும் என பெண்கள் நம்பினர். குழந்தைப்பேறு வாழ்க்கையின் பயன் என மதிக்கப்பட்டது என்பதனை,

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**

**பயக்குறை இல்லைத் - தாம் வாழும் நாளே (புறம்., 188: 6-7)**

என்ற பாடல் குறிப்பிடுகிறது.

**கடவுட் கற்பொடு குடிக்கு விளக்கு ஆகிய**

**புதல்வற் பயந்த புகழ் மிகு சிறப்பின்**

**நன்னராட்டிக்கு அன்றியும் எனக்கும்**

**இனிது ஆகின்றால் சிறக்க, நின் ஆயுள்! (அகம்., 184: 1-4)**

என்ற பாடலில் சங்ககால பெண்கள் இல்லற வாழ்வின் இனிமை மக்கட் பேற்றாலே நிறைவு பெறு என்பதை உணர்ந்திருந்தனர். தெய்வத்தன்மை பொருந்திய கற்புடன், குடிக்கு சிறப்பு தரும் மகனை பெற்றுக்குடியின் பெருமையை உணர்த்துபவர்களாகப் பெண்கள் திகழ்ந்தனர் என்பதை அறியலாம்.

**கையும் காலும் தூக்கத் தூக்கும்**

**ஆடிப் பாவைப் போல்**

**மேவன செய்யும்; தன் புதல்வன் தாய்க்கே (குறுந்., 8: 4-6)**

என்ற பாடலில் தன் மகனின் தாயான என் மனைவி கூறுவனவற்றை கண்ணாடியுள் தோன்றுகின்ற பாவையைப் போல கேட்டு நடப்பேன் என்கின்றான் தலைவன். இதன் மூலம் பெண்ணின் தாய்மைநிலை கணவனாலும், குடும்பத்தினராலும் போற்றப்பட்டதை அறியலாம்.

**விருந்தோம்பல் பண்பு**

தமிழர் பண்பாடான விருந்தோம்பல் பண்பாட்டைப் பேணி பாதுகாப்பதில் பெரும்பங்கு வகித்தனர் பெண்கள் என்பதை,

**சென்றதற் கொண்டு, மனையோள் விரும்பி**

**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**

**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**

**குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்**

**குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து**

**சிறிது புறப்பட்டன்றோ விலளே (புறம்., 333: 8-13)**

அரசனைக் காணச் செல்லும் புலவர்களுக்கு வீட்டில் உள்ள பெண்கள் வரகு, தினை ஆகியவற்றில் உணவு சமைத்தும், கொடையாகவும் வழங்கினர் என்றும், இதனால் வரகு, தினை ஆகியவை தீர்ந்ததாகவும் மீண்டும் வந்த புலவர்களுக்கு வீட்டில் விதைப்பதற்கு வைத்திருந்த தானியங்களை உரலிலிட்டு இடித்து உணவு சமைத்து வழங்கினர் என்பதின் மூலம் விருந்தோம்பலுக்கு பெண்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்துள்ளனர் என்பதை அறியலாம்.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்ற முன்னோர் கூற்றின் படி உணவு என்பது ஒவ்வோர் உயிருக்கும் அன்றாடம் தேவைப்படுகின்ற ஓர் அரிய உயிர்ப்பொருளாகும். ஓரறிவு உயிரிலிருந்து ஆறறிவு படைத்த மனிதன் வரை ஏதாவதொரு வகையில் வேளைக்கு உணவுண்டு சக்தி பெறுகிற வகையில் உணவானது மிகுந்த முக்கியமானதாகிறது. (பொ. பொற்செல்வி, ப. 311).**

**படமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்**
**விழுக்குநிணம் பெய்த தயிர்க்கண் மிதவை**
**யாணர் நல்லவை பாணரொடு ஒராங்கு**
**வருவிருந்து அயரும் விருப்பினள் (புறம்., 326: 9-12)**

என்ற பாடலில் பெண் வீட்டின் அருகிலுள்ள மடுக்குகளிலிருந்து பிடித்த உடும்பின் இறைச்சியை சமைத்து விருந்தாக வரும் பாணர்களுக்கு வழங்கி தானும் உண்டுள்ளான். **சங்ககால மக்கள் செல்வத்தின் பயனே ஈதலே என்ற உயர்ந்த பண்பினைக் கொண்டு வாழ்ந்து வந்தனர் (முனைவர் டி.ஆர். உதயகுமரி, ப. 456).** மேலும் சங்ககால பெண்கள் விருந்தினர் வரவுக்காக எதிர்பார்த்து கலந்து நின்றனர் என்பதை,

**விளைக வயலே வருக இரவலர்**
**என வேட்டோளே யாயே யாமே (ஐங்., 2: 1-2)**

என்ற பாடல் புலப்படுத்துகிறது.

**புறவும் இதலும் அறவும் உண்கெனப்**
**பெய்தற்கு எல்லின்று பொழுதே அதனால்**
**முயல்சுட்ட வாயினும் தருகுவோம் (புறம்., 319: 6-9)**

என்ற பாடலில் இரவு நேரத்தில் வந்த பாணனுக்கு பெண்ணாருத்தி ஊற்றுநீர், உலர வைத்த தினை, முயற்கறியையும் சுட்டு கொடுத்து இரவில் தங்க வைத்து அனுப்பியுள்ளான்.

**முறுவல் கொண்ட முகங்காண் அம்மே (நற்., 120: 12)**
**விருந்து அயர் விருப்பொடு வருந்தினள்**
**முறுவல் இன்நகை காண்கம் (நற்., 81: 8-9)**
**அல்லி லாரினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியற் குறுமகள் (நற்., 142: 9-11)**

போன்ற பாடல்களில் தலைவி இன்முகத்தோடு வரவேற்றதையும், விருந்து கொடுத்ததையும் தெரிந்து கொள்ளலாம்.

**நாட்டுப்பற்றும் வீரமும்**

**சங்ககால பெண்கள் நாட்டுப்பற்றுடன் வீரம் மிக்கவர்களாகவும் திகழ்ந்துள்ளனர்.**

**கெடுக சிந்தை; கடிது இவள் துணிவே…செருமுக நோக்கிச் செல்க என விடுமே (புறம்., 279: 1-11)**

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

முதல் நாள் போரில் தன் அண்ணனையும், மறுநாள் போரில் தன் கணவனையும் இழந்த பெண் ஒருத்தி மூன்றாவது நாள் போர்பறை கேட்டவுடன் தன் ஒரே மகனுக்கு தலைசீவி எண்ணெய் தேய்த்து கையில் வேலை கொடுத்து போர்களம் அனுப்புகிறாள். இதன் மூலம் அப்பெண்ணின் நாட்டுப்பற்று வெளிப்படுகிறது. மறக்குடியில் மணம் புரிந்த பெண் ஒருத்தியிடம் உன் மகன் எங்கே என்று ஒருவர் வினவியபோது, தன் மகனை ஈன்ற வயிற்றை புலி இருந்த குகை என்றும் அவன் தற்போது போர்களத்தில் இருப்பான் சென்று காண்க என்று கூறுவதால் நாட்டைக் காப்பதற்காக போர்களத்தில் ஆண்கள் சென்று மரணமடைவதை பெருமையாக எண்ணினர் பெண்கள் என்பதை உணரலாம்.

**சங்ககால மக்கள் போர் சென்று அதில் வெற்றி பெற்று விழுப்புண் பெற்று மடிவதை தமது கடமையாகக் கொண்டிருந்தனர். (முனைவர் சீ. வைஜெயந்திமாலா, ப. 211)**

போருக்குச் சென்ற ஆணினது மார்பில் காயம்பட்டு உயிர்துறந்தால் அதனை பெருமையாகவும், புறமுதுகில் காயம்பட்டால் அதனை இழிவாகவும் கருதினர் பெண்கள் என்பதை,

**நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்…**
**ஈன்ற தோன்றினும் பெரிது உவந்தனளே (புறம்., 278: 1-9)**

என்ற பாடலில் தன் மகன் புறம்காட்டி ஓடும் போது காயம் ஏற்பட்டு இறந்திருந்தால் அவனுக்கு பாலூட்டிய மார்பையே அறுத்து எறிவதாக சூளுரைத்தாள் தாய். அதனால் கையில் வாளினை எடுததுக் கொண்டு போர்க்களம் சென்று பார்த்தப்போது தன் மகன் வாளால் மார்பில் வெட்டுப்பட்டு கிடப்பதைக் கண்டதும் அவனைப் பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியை விட விழுப்புண் பட்டு மாண்டதைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தாள் தாய். இதன் மூலம் பெண்களின் நாட்டுப்பற்றும், வீரமும் வெளிப்படுகிறது.

**கல்வியில் சிறத்தல்**

சங்க இலக்கியங்களில் கல்வியின் உயர்வை பேசும் பல பாடல்கள் உள்ளன.

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே (புறம்., 183: 1-2)**

என கல்வியின் இன்றியமையாமைப் பற்றியும்,

**வேற்றுமை தெரிந்த நாறபால் உள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பினும்**
**மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே (புறம்., 183: 8-10)**

என கல்வியின் பெருமை பற்றியும் புறநானூறு குறிப்பிடுகிறது.

சங்ககாலத்தில் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினர். ஆதிமந்தியார், வெள்ளிவீதியார், ஔவையார், காக்கைபாடினியார் போன்ற பெண் புலவர்கள் பாடல்கள்

இயற்றினர் என்றும், அவர்கள் அனைவராலும் மதிக்கப்பட்டனர் என்றும் இலக்கியங்களால் அறியலாம்.

> **பெண்களின் ஆளுமைத்திறனுக்கு இடையூறாக விளங்குவதே அவர்களிடம் காணப்படும் கல்வியின்மையே ஆகும். (முனைவர் இரா.அனுசுயா, ப. 35).**

சங்ககால பெண்கள் கல்வி அறிவோடு விவேகமும் பெற்றிருந்தனர் என்பதை,

> **இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டி...**
> **அண்ணல் எம் கோமான் வைந்நுதி வேலே (புறம்., 95: 1-9)**

என்ற பாடலில் அதியமானின் அரசவையில் ஔவையாருக்கு தனி மதிப்பும் மரியாதையும் வழங்கப்பட்டது என்றும் ஔவையார் தூதாகச் சென்று தன் மதிநுட்பத்தினால் போரையே நிறுத்தினார் என்ற செய்திகளும் புறநானூற்றுப் பாடல்களில் காணப்படுகின்றன.

ஔவையார் ஆத்திச்சூடியில் "ஓதுவது ஒழியேல்" (வரி. 11) என்கிறார். அதாவது ஒருவர் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும் வாழ்வினைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்கும் துணைநிற்கும் செய்திகளை அறிவதற்கு நாம் அறிவு சார்ந்த நூல்களைப் படிப்பதை தவறாமல் கடைபிடிக்க வேண்டும் என்கிறார்**.**

> **தமிழ்மொழியை அன்றாடம் புதுப்பித்துப் பாடிய ஔவை பிராட்டிக்கு தமிழை வரும் சந்ததியினருக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்ற காரணத்தினால் தான், சாக வரம் பெற்ற நெல்லிக்கனியை அப்பிராட்டிக்கு ஈந்து மொழியைக் கடத்தும் மாபெரும் தூதுவராக பணியை ஒப்படைத்து கனியை ஈன்றான் அதியமான். (முனைவர் அ. நசீமா, ப. 256)**

இவ்வாறு பெண்பாற் புலவர்களின் பாடல் நயமும், பொருள் நலமும் அக்கால மகளிர்தம் இயற்றமிழ்ப் புலமையினை நன்கு எடுத்துரைக்கின்றன.

**முடிவுரை**

பெண்கள் மென்மையுடையவர்களாகவும், அதிக துன்பப்படுபவர்-களாகவும் சங்க இலக்கியங்களில் சித்தரிக்கப்பட்டாலும் சமூக நிலைப்பாட்டிற்கும் உயர்வுக்கும் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதை சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. சங்ககாலத்தில் மட்டுமல்ல தற்காலத்திலும் கல்வி, மருத்துவம், சட்டம், பொறியியல் என அனைத்துத் துறைகளிலும் பெண்கள் தடம் பதித்துள்ளனர். பண்டைய தமிழக பெண்கள் சமுதாயத்தில், கல்வியிலும் உயர்ந்த நிலையில் இருந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் தெரிந்து கொண்டோம்.

**குறிப்புகள்**

[1] அனுசுயா, இரா. "பெண்களும் ஆளுமைத் திறனும்." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.2, Special Issue.3, Feb.2020.

[2] இந்துபாலா, இரா. "தமிழ் இலக்கியங்களில் பெண்ணிய கட்டமைப்பும் கட்டுடைப்பும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, 2020.

[3] உதயகுமாரி, டி.ஆர். "சங்க பாடல்களில் பண்பாட்டுக் கூறுகள்." *புதிய அவையம்*, Special Issue : Vol.07, Issue.03. December 2023.

[4] சாமிநாதய்யர், உ.வே. (உ.ஆ.). *ஐங்குறுநூறு* (பழையவுரை). வைஜெயந்தி அச்சுக்கூடம், சென்னை, 1903.

[5] சோமசுந்தரன், பொ.வே. (உ.ஆ.) *அகநானூறு.* சைவ சித்தாந்த நூற்கழக வெளியீடு, சென்னை, 1966.

[6] துரைசாமி பிள்ளை, சு. ஔவை. நற்றிணை (விளக்கவுரை), அருணாப் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1968.

[7] துரைசாமிப்பிள்ளை, க. *புறநானூறு உரையுடன்.* கழக வெளியீடு, திருநெல்வேலி, 2007.

[8] நச்சினார்க்கினியார். *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* கேசரி அச்சுக்கூடம், சென்னை, 1931.

[9] நசிமா, அ. "இன்றைய கால சூழலில் மாண்புறும் பண்பாட்டின் மாபெரும் தூதுவர்கள் மகளிர்." *வெற்றிமுனை பன்னாட்டு வாழ்வியல் மேம்பாட்டு இதழ்*, உலகத் தமிழ் வளர்ச்சி மாநாடு 2024, மலர் 15, இதழ். 08, ஆகஸ்ட் 2024.

[10] நாகராசன், வி., (உ.ஆ.). *குறுந்தொகை மூலமும் உரையும்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், அம்பத்தூர், சென்னை - 600 098.

[11] பொற்செல்வி, பொ. "சங்க இலக்கியங்களில் வாழ்வியல் நெறிகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி.2, சிறப்பு இதழ் 3, பிப்ரவரி.2020.

[12] ஜெயந்திமாலா, சீ. வை. "புறநானூறு காட்டும் மனித உரிமைச் சிந்தனைகள்." *வெற்றிமுனை பன்னாட்டு வாழ்வியல் மேம்பாட்டு இதழ்*, உலகத் தமிழ் வளர்ச்சி மாநாடு 2024, மலர் 15, இதழ். 08, ஆகஸ்ட் 2024.

[13] ஜெய்ஸ்ரீ, ந. "ஐங்குறுநூற்றில் பண்பாட்டுப் பதிவுகள்." *வெற்றிமுனை பன்னாட்டு வாழ்வியல் மேம்பாட்டு இதழ்*, உலகத் தமிழ் வளர்ச்சி மாநாடு 2024, மலர் 15, இதழ். 08, ஆகஸ்ட் 2024.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.